## தி.மு.கழகத்தில் 2 கோடி உறுப்பினர்களைச் சேர்க்க

# ‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுப்பினர் சேர்க்கை இயக்கம்!

## ஜூலை 1 அன்று முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்!

### அமைச்சர் தங்கம் தென்னரசு – கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!

சென்னை, ஜூலை 26-

தி.மு.கழகத்தில் 2 கோடி உறுப்பினர்களை சேர்க்க ‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுப்பினர் சேர்க்கை இயக்கத்தை ஜூலை 1 ஆம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் தொடங்கி வைக்கிறார்! தமிழ் மொழி சமஉரிமை பெற்றிட தமிழ்நாடு ஓரணியில் திரள வேண்டும்! பெரியாரையும், அண்ணாவையும் பழித்தவர்கள் யாரும் தமிழ்நாட்டு அரசியலில் தலையெடுத்தது இல்லை! என செய்தியாளர்கள் சந்திப்பில் அமைச்சர் தங்கம் தென்னரசு - கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தெரிவித்தனர்.





24.06.2025 அன்று பிற்பகல் அமைச்சர் தங்கம் தென்னரசு, அமைச்சர் அமைச்சர் மூர்த்தி, ஆர்.எஸ்.பாரதி, ஆகியோர் சென்னை, தேனாம்பேட்டை, அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

இதுபற்றிய செய்தி அறிக்கை வருமாறு :-

‘ஓரணியில் தமிழ்நாடு’ என்ற பெயரில் திமுகவின் உறுப்பினர் சேர்க்கைக்கான பணியை நாங்கள் தொடங்கியிருக்கிறோம்.

வரக்கூடிய ஜூலை மாதம் 1 ஆம் தேதி முதலமைச்சர் அவர்கள் இது குறித்து பத்திரிக்கையாளர்களைச் சந்தித்து, முறைப்படி உறுப்பினர் சேர்க்கையை தொடங்க இருக்கிறார்.

அடுத்த நாள் அனைத்து மாவட்டங்களில் உள்ள இடங்களிலும் ஆங்காங்கே இருக்கக் கூடிய மாவட்ட கழக செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் பெருமக்கள் எல்லாம் பேரணியாகச் சென்று இந்த உறுப்பினர் சேர்க்கை முகாம்களை தொடக்கி வைக்க இருக்கிறோம்.

அதை தொடர்ந்து ஜூலை மாதம் 3 ஆம் தேதி தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 68,000 வாக்குசாவடிகளிலும் உறுப்பினர் சேர்க்கை முகாம்களை வாக்குச்சாவடி முகவர்கள், தகவல் தொழில்நுட்ப துறை முகவர்கள், மற்ற அணிகளாக இளைஞர் அணி, மகளிரணி போன்றவற்றின் நிர்வாகிகள், கிளை கழகத்துடைய நிர்வாகிகள் ஒவ்வொரு பூத்-களிலும் இருக்கக்கூடிய வீடுகளுக்கு நேரடியாக சென்று ஒவ்வொரு வீட்டிலும் தலா 10 நிமிடம் அமர்ந்து, அங்கே இருக்கும் வாக்காளர் பெருமக்களில் 30% நம்முடைய கழகத்தில் இணையகூடிய வகையில் அரசியல் பணியாற்றச் சொல்லியிருக்கிறோம்.

தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு வீட்டுக்கும் சென்று, அத்தனை வாக்காளர்களையும் சந்தித்து மண், மொழி, மானம் காக்க ஓரணியில் இணைய அழைப்பு விடுக்கப்போகிறோம்.

இதன் இன்னொருகட்டமாக, ஏறத்தாழ 2 கோடி பேரை நமது கழகத்தின் உறுப்பினர்களாக சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

நமது கழகத்தின் முக்கிய திட்டங்களை விளக்கி, இந்த நான்கு ஆண்டு ஆட்சி சாதனைகளை அவர்கள் இடத்தில் எடுத்து சொல்லி, டிஜிட்டலாக அவர்கள் ஒரு செயலியின் மூலமாகவும், ஒரு படிவம் மூலமாகவும் அவர்களை இணைக்கக் கூடிய முயற்சிகளை மேற்கொள்ள இருக்கிறோம்.

தமிழகத்தில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் செல்லும் அளவில் இந்த உறுப்பினர் சேர்க்கைக்கான முகாம்கள் நடைபெற இருக்கிறது. தமிழக மக்கள் எப்போதும் எந்த ஒரு அரசியல் சூழ்நிலையிலும் மதங்களையோ, சாதிகளையோ அவற்றுக்கெல்லாம் மாறுபட்டு எப்போதும் ஓரணியில் நின்று அரசியல் கருத்துகளை எடுத்துரைப்பார்கள்.

தமிழ்நாடு எந்த ஒரு சவாலையும் எதிர்க்கொள்கிற போது, அது ஓரணியில் திரண்டு நிற்பதுதான் தமிழ்நாட்டிற்குரிய இயற்கையான பண்புக் கூறு என்பதை மனதில் வைத்து, இந்த ‘ஓரணியில் தமிழ்நாடு’ என்கிற உறுப்பினர் சேர்க்கையை முதலமைச்சர் அவர்கள் 1 ஆம் தேதி தொடங்கி வைக்க இருக்கிறார்.

தொடர்ச்சியாக வட மொழிக்கு அவர்கள் அதிக முக்கியத்துவத்தையும் நிதியையும் ஒதுக்கியுள்ளனர். இதனால் வட மொழிக்கு அவர்கள் கொடுக்கும் முன்னுரிமை மீண்டும் உறுதியாகியுள்ளது.

தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்ற காரணத்தினால் தான் கலைஞர் அவர்கள் செம்மொழி அந்தஸ்த்தை உருவாக்கினார்கள். வட மொழிக்கு இருக்க கூடிய முக்கியத்துவத்தை, மற்ற மொழிகள் உட்பட தமிழ் மொழியும் பெற முடியாமல் போயுள்ளதால் தான், தமிழ்நாடு ஓரணியில் திரள வேண்டும் என்று கூறுகின்றோம்.

திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பின்வரும் செய்தியைத் தெரிவித்தார்:-

‘உடன்பிறப்பே வா’ என்ற நிகழ்வின் மூலம் ஒன்றிய, நகர, பேரூர் கழகத்துடைய செயலாளர்களை ஒவ்வொருவரையும் தனித் தனியாகச் சந்திப்பேன் என்று 1 ஆம் தேதி மதுரையில் நடைபெற்ற பொதுக் குழுவில் முதலமைச்சர் அறிவித்தற்கு ஏற்ப கடந்த 23 ஆம் தேதியில் இருந்து இதுவரை 20 தொகுதியின் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட கழக செயலாளர்கள், மண்டல பொருப்பாளர்கள் ஆகியரோடு தலைவர் தளபதி அவர்கள் நாள்தோறும் 3 மணி நேரம் உரையாடி வருகின்றார்.

ஒவ்வொரு கூட்டமும் 3 மணி நேரத்திற்கு மேலாக அவர்களின் கருத்துகளைக் கேட்டு, தலைவரும் நிர்வாகிகளும் மனம் விட்டு பேசினார்கள். அதன் அடிப்படையில் கழகத்தின் தோழர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் சென்றார்கள். ஒன்றிரண்டு நாட்களில் உறுப்பினர்கள் சேர்க்கையை தொடங்க இருக்கிறார்கள். ஆகவே உணர்ச்சி யோடு, மகிழ்ச்சியோடு இந்த சந்திப்பு மிகவும் பயன் உள்ளதாக அமைந்துள்ளது.

பெரியார், அண்ணாவுக்கு அவமதிப்பு பற்றி -

நாங்கள் தெளிவாக எங்களின் அறிக்கையில் சொல்லி விட்டோம், எங்களை விட பொதுமக்கள் கொதித்து போய் இருக்கிறார்கள், தமிழ்நாடே கொதித்து போய் இருக்கிறார்கள். பெரியாரையும், அண்ணாவையும் பழித்தவர்கள் யாரும் தமிழ்நாட்டு அரசியலில் தலையெடுத்தது இல்லை. இந்த இரு பெரும் தலைவர்களையும் இழித்து பேசியதை வேடிக்கை பார்த்ததைத் திராவிட முன்னேற்ற கழகம் மட்டுமில்ல, தமிழ் உணர்வுமிக்க அனைவரும் கண்டனத்தை தெரிவித்து கொண்டு இருக்கிறார்கள். அதனை நீங்களே பார்க்கலாம். ஒரு சொல்லும் சரி, ஓர் ஆயிரம் சொல்லும் சரி உணர்ச்சி உள்ளவர்களுக்கு உறைக்கும்.

அரசு நடவடிக்கை எடுக்குமா என்கிற கேள்வி பற்றி -

மக்களே எதிர்க்கும்போது அரசு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டி இருக்கு? இதை பெரிதாக வேண்டிய அவசியம் இல்லை. மக்கள் இதை புறக்கணித்துவிட்டார்கள். நாங்கள் 100 மாநாடு நடத்தி திமுகவுக்கு சேர்க்க வேண்டிய ஓட்டை ஒரே மாநாட்டில் சேர்த்து விட்டார்கள்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

---

### கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம்

## பொருளாளர் பொறுப்புக்கான தேர்தல்

### தேர்தல் முடிவு! தலைமைக் கழக அறிவிப்பு

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழகப் பொருளாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆர்.ஜெயராமன் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், அப்பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து **2025, ஜூன் 23 (திங்கட்கிழமை) அன்று ரூ.25000/ வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.** ”என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட பொருளாளர் பொறுப்புக்கு வீ.சு.வீரபாண்டியன் அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

**கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட பொருளாளராக,**
**திரு.வீ.சு.வீரபாண்டியன்,**
1/1, அண்ணா குடில், கெடிலம்,
திருநாவலூர் அஞ்சல், உளுந்தூர்பேட்டை வட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம் - 607 204 அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018,
நாள் : 24.06.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

---

### பெரம்பலூர் மாவட்டம்

## பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல்

### தேர்தல் முடிவு! தலைமைக் கழக அறிவிப்பு

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் பெரம்பலூர் மாவட்டத்தில், பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட அழகு நீலமேகம் அவர்கள் வேப்பூர் கிழக்கு ஒன்றியக் கழக பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளதால், கழக சட்டதிட்ட விதிகளின்படி, ‘ஒருவருக்கு ஒரு பொறுப்பு’ என்ற அடிப்படையில், அழகு நீலமேகம் அவர்கள், தான் வகித்து வந்த பொதுக்குழு உறுப்பினர் பொறுப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டதால்; பெரம்பலூர் மாவட்டம், **பொதுக்குழு உறுப்பினர்** பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து **2025, ஜூன் 23 (திங்கட்கிழமை) அன்று ரூ.25000/வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.**" என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

பெரம்பலூர் மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கு டி.கே.இராமச்சந்திரன் அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

**பெரம்பலூர் மாவட்டம், பொதுக்குழு உறுப்பினராக,**
திரு. **டி.கே.இராமச்சந்திரன்,**
4/121, பீல்வாடி, சித்தளி அஞ்சல்,
குன்னம் வட்டம்,
பெரம்பலூர் மாவட்டம் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.


"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018,
நாள் : 24.06.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அ. இராசமாணிக்கம்
### ஜூன் 26 (2016)



**பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோர்மீது பற்றுக் கொண்டு, மாணவப் பருவத்திலேயே தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.**

**கழகப் பொதுக்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.**

**நாகை நிலவள வங்கி தலைவராகவும், நாகை கூட்டுறவு விற்பனை சங்கத்தின் தலைவராகவும், கீழையூர் கூட்டுறவு சங்கத் தலைவராகவும் பதவி வகித்தவர்.**

**1971–ல் நாகை சட்டமன்ற தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

### ஆதிக்க இருள் அகற்றிட வந்த விடிவெள்ளி

# ‘சமூக நீதிக் காவலர்’ வி.பி.சிங் புகழை நாளும் போற்றுவோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஜூன். 26-

முன்னாள் பிரதமர் வி.பி.சிங் அவர்களின் பிறந்தநாளையொட்டி வாழ்த்துத் தெரிவித்துள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிடுகையில் “ஆதிக்க இருள் அகற்றிட, சமூக நீதியெனும் பேரொளியைத் தூக்கிச் சுமந்த சமூக நீதிக் காவலர் வி.பி.சிங் புகழை நாளும் போற்றுவோம்” எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேனாள் இந்தியப் பிரதமர் சமூகநீதிக் காவலர் வி.பி சிங் அவர்களின் 95 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



**இந்திய நிலப்பரப்பில் மண்டிக்கிடந்த ஆதிக்க இருள் அகற்றிட, சமூகநீதி எனும் பேரொளியைத் தூக்கிச் சுமந்த விடிவெள்ளி ‘சமூகநீதிக் காவலர்’ வி.பி. சிங் அவர்களின் புகழை நாளும் போற்றுவோம்! ஆதிக்கத்துக்கு எதிரான போராட்ட வரலாற்றைத் திரிபுகளால் மாற்றுவது மீண்டும் அடிமைத்தனத்துக்கே வழியமைக்கும் முயற்சி என்பதை இளம் தலைமுறைக்கு எடுத்துச் சொல்வோம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---







## தி.மு.க. இளைஞர் அணி



## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### திண்டுக்கல் மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எஸ்.ஹரிஹரசுதன் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு திண்டுக்கல் மேற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியம்–நகரம்–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 27.6.2025 | தொப்பம்பட்டி மேற்கு ஒன்றியம் | ஆண்டிநாயக்கன் வலசு | ம.சையது முஸ்தபா<br>அ.சுஹாசினி |
| 2 | | கீரனூர் பேரூர் | கலைஞர் திடல் | ம.சையது முஸ்தபா<br>அ.சுஹாசினி |
| 3 | | வடமதுரை மேற்கு ஒன்றியம் | கம்பிலியம்பட்டி | அ.செல்வகுமார்<br>வ.ராஜேஸ்வரி |
| 4 | | வடமதுரை பேரூர் | ஏ.வி.பட்டி | அ.செல்வகுமார்<br>வ.ராஜேஸ்வரி |
| 5 | 28.6.2025 | தொப்பம்பட்டி மத்திய ஒன்றியம் | தொப்பம்பட்டி | ம.சையது முஸ்தபா<br>அ.சுஹாசினி |
| 6 | | தொப்பம்பட்டி வடக்கு ஒன்றியம் | கரியாம்பட்டி | ம.சையது முஸ்தப்பா<br>அ.சுஹாசினி |
| 7 | | வடமதுரை கிழக்கு ஒன்றியம் | புத்தூர் | சி.மில்லர் மண்டேலா<br>சி.ஷாலினி |
| 8 | | அய்யலூர் பேரூர் | ஏ.கோம்பை | சி.மில்லர் மண்டேலா<br>சி.ஷாலினி |
| 9 | | ஒட்டன்சத்திரம் மேற்கு ஒன்றியம் | விருப்பாட்சி | அ.செல்வகுமார்<br>ஜோ.கேத்ரின் மெர்லினா |
| 10 | 28.6.2025 | ஒட்டன்சத்திரம் நகரம் | தும்பிச்சம்பட்டி சத்யா நகர் | அ.செல்வகுமார்<br>ஜோ.கேத்ரின் மெர்லினா |
| 11 | | சாணார்பட்டி தெற்கு ஒன்றியம் | கோபால்பட்டி | பூவை.முருகவேல்<br>வ.ராஜேஸ்வரி |
| 12 | | சாணார்பட்டி வடக்கு ஒன்றியம் | அதிகாரிப்பட்டி | பூவை.முருகவேல்<br>வ.ராஜேஸ்வரி |
| 13 | 29.6.2025 | ஒட்டன்சத்திரம் மத்திய ஒன்றியம் | கொல்லப்பட்டி | ம.சையது முஸ்தபா<br>வ.ராஜேஸ்வரி |
| 14 | | ஒட்டன்சத்திரம் வடக்கு ஒன்றியம் | இடையகோட்டை | ம.சையது முஸ்தப்பா<br>வ.ராஜேஷ்வரி |
| 15 | | வேடசந்தூர் தெற்கு ஒன்றியம் | பூத்தாம்பட்டி | அ.செல்வகுமார்<br>அ.சுஹாசினி |
| 16 | | வேடசந்தூர் பேரூர் | மாரியம்மன் கோயில் தெரு | அ.செல்வகுமார்<br>அ.சுஹாசினி |
| 17 | | நத்தம் தெற்கு ஒன்றியம் | வத்திப்பட்டி | பூவை.முருகவேல்<br>ஜோ.கேத்ரிலின் மெர்லினா |
| 18 | | நத்தம் பேரூர் | நல்லகுளக்கடை | பூவை.முருகவேல்<br>ஜோ.கேத்ரிலின் மெர்லினா |
| 19 | | நத்தம் வடக்கு ஒன்றியம் | அனக்காட்டூர் | பூவை.முருகவேல்<br>ஜோ.கேத்ரிலின் மெர்லினா |
| 20 | 30.6.2025 | வேடசந்தூர் வடக்கு ஒன்றியம் | வீரப்பட்டி | அ.செல்வகுமார்<br>அ.சுஹாசினி |
| 21 | | எரியோடு பேரூர் | குருக்காளையன்பட்டி | அ.செல்வகுமார்<br>அ.சுஹாசினி |
| 22 | | குஜிலியம்பாறை வடக்கு ஒன்றியம் | நொச்சிப்பட்டி | ம.சையது முஸ்தபா<br>துரை.தினகரன் |
| 23 | | குஜிலியம்பாறை தெற்கு ஒன்றியம் | பல்லாநத்தம் | ம.சையது முஸ்தபா<br>துரை.தினகரன் |
| 24 | | பாளையம் பேரூர் | சிலும்பாகவுண்டனூர் | ம.சையது முஸ்தபா<br>துரை.தினகரன் |

**திண்டுக்கல்**
நாள் : 24.06.2025

கலைஞர் 100 1924 - 2023

